EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 3

## சங்ககால இசை மரபில் சமகால இசை வகைகள்

*முனைவர் ரெ. எழில்ராமன்*
உதவிப்பேராசிரியர்,இசைத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
மின்னஞ்சல்: musicezhil@gmail.com

## *முன்னுரை*

இசைக்கு மொழியேது, தமிழே பழம்மொழி; இளம் மொழி; பிற மொழிகளை தளைத்தெடுக்க செய்த தனி மொழி, தமிழிசையை வளர்த்டுக்க வகுத்த முதுமொழி. முச்சங்கத்திற்கு முன்பாய் கருவுற்று, முச்சங்கப் புலவர் பால் பாலூட்டப்பெற்று, பிற்காலத்தில் செம்மொழித் தாயாய் உயரியத் தன்மையைப் பெற்ற முத்தமிழ்த் தாய் தமிழ்த்தாய். தன்னிளமை குன்றா தமிழ்த் தாயோடு வாழ்ந்த தமிழரின் தனித்தன்மையால் தமிழ் மொழியின் சீரியத் தனித்திறமையால் தேன்தமிழ் தமிழிசையை உலகம் போற்றும் விந்தையை நாம் அறிகிறோம். தமிழ்மொழி ஒலிப்புறப்பாடு கொண்டு, தமிழிசை என்னும் நகர்வலத்தை சுவாசித்த உயிரணுக்கள் மரபு மாறாமல் திழிசையின் உரிய மரபைத் தத்தம் செல்வாக்கு குறையாமல் நிலைநிறுத்த தமிழிசை வகைப்பாக்கள் சங்க காலத்தில் உயிர்த்தெழுந்து சமகாலம் வரை உருவாக்கப்பெற்று நிலைப்பாடு கொண்டுள்ளதை அறியலாம். இதன் பின்னணியில் சங்க காலப் புலவர்களும், இசை பாடிய பாடினிகளும், இயலிசையாளர்களும் கையாண்ட இசை வகைகளை சங்ககாலப் பின்னணி கொண்டு சமகால இசை உருவ வகைகளை எடுத்துக்காட்டும் முகமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

# இசை வகைகள்

தமிழ் இலக்கணம் எங்கு பிறக்கின்றது அங்கே இசை வகைகள் பல பிறப்பெய்துகிறது என்று கூறலாம். முத்தமிழ் போன்று முச்சங்கமும் கை கோர்த்து இணைந்த இசைத்தமிழில் செந்தமிழ் இலக்கணங்கள் முந்த தமிழ், மூத்த மொழியாய் உதித்த பைந்தமிழின் தனிக்குணம், சங்கப் புலவர்களுக்கென்று தனிக் கருணையை தந்தது. பண்பட்ட புலவர்கள் வாழ்ந்த சங்க காலத்தில் பண்கள் பல பிறக்க இசையும், தமிழும் ஆணிவேர்களாக திகழ்ந்த மகிமையை அனைவரும் அறிவோம். பண்கள் கொண்ட பண்ணிசைப் பாக்கள் பல தொடுக்க, எண்ணற்ற இசை உருவகைகள் சங்க கால கலையுலகில் உலா வந்ததை இதன்வழி நன்குணரமுடிகிறது.

# இசைப்பு - இசைப்பா

இசைப்பாடல்களை இசைப் பாக்கள் என்று கூறும் வழக்கிருந்த நிலையில் இசைப்பு என்பது ஆங்கில மொழியில் Tune என்று கூறுகிறார் டாக்டர் D. ஆல்பர்ட் என்பதை தமிழறிஞர் இலக்குவனார் சுட்டிக்காட்டுகிறார்.

# “இசைப்பு இசையாகும்”[1]

என்று இசைப்பின் பொருளை உணரமுடிகிறது. இசைப்பு இருந்தால் மட்டுமே இசை வகைகளாக உருப்பெறும் விதத்தை சங்க நூல்கள் இசை இலக்கணப் பாக்கள் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளதன் வழி சங்க நூல்கள் பன்னமைக்கும் வனப்பை இசை இலக்கணத்தோடு அழகுற எடுத்துக்காட்டுகின்றன.

# இசை உருவகைகள்

கடைச் சங்க காலத்தில் சிலப்பதிகாரத்தில் இசை உருக்கள் “வரி” என்றப் பெயரால் காணப்பெற்றன. அம்மானை, ஊசல், வள்ளைப் பாடல்கள் அடையாளம் காணப்பட்டன. எனினும் இசையமைப்புக்கள் எழுதும் முறை இல்லாததால் அவை எவ்வாறு பாடப்பட்டன எவ்வகை அமைப்பை ஒத்திருக்கின்றன என அறிய இயலவில்லை.

> “பாவோ டனைதல் இசையென்றார் பண்ணென்றால்
>
> மேவார் பெருந்தான மெட்டாலும் - பாவாய்
>
> எடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப்
>
> படுத்தமையாற் பண்ணென்று பார்“[2] (3:26: அடியார்க்.உரை)

உடம்பில் ஓசை தோன்றுவது போல் ஒலி எழுத்துக்களால் பண்கள் பிறந்த முறையை சங்க நூல்கள் பல நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இசையின் மூலப் பொருளான பண்கள், தாளத்துடன் பாடல்களாக உருப்பெறுவதை மேற்கண்ட செய்யுள் எடுத்துக்காட்டுகின்றது.

"பாவோடு இசைத்தல் பண்ணென்றார் (பஞ்சமரபு.வெண்பா. 52)

பாவோடு இசைதல் இசை என்றார்"[3] (சிலப். 3:36, உரை.மேற்)

## பா வகைகள்

சிலப்பதிகாரத்தின் கடலாடு காதையில் அடியார்க்கு நல்லார் "பஞ்சமரபு" நூலில் இருந்து பாவகைகளை இன்னிசைப் பாக்களாக சுட்டிக் காட்டுகின்றார்.

"செப்பிய சிந்து திரிபாதஞ் சீர்ச்சவலை

தப்பொன்று மில்லா சம்பாத - மெய்படியுஞ்

செந்துறை வெண்துறையே தேவபாணி வண்ணமென

பைந்தொடியா இன்னிசையின் பா" (பஞ்சமரபு-வகையொழி மரபு)

ஒன்பது வகைப் பாக்கள் இதன் மூலம் அறிய கிடைக்கிறது. செந்துறை, வெண்துறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணம், சிந்து, திரிபதை, சவலை, சமபாதம் ஆகியனவாகும். இவை சமகால இசை வகைகளாக, சிந்து, போற்றி பாடல், வர்ணம், கீதம், மற்றும் நாட்டுப்புற பாடல்கள் அமைப்பில் அன்றே வழக்கில் இருந்துள்ளதைக் காட்டுகின்றது. இவை செவ்வியல் பாடல் வகைகளாக, நாட்டுப்புற இசைப்பாடல்களாக வளர்ந்துள்ளன என கருதலாம் என்று முனைவர். இ. அங்கயற்கண்ணி அவர்கள் தன்னுடைய நூலிலே ஆய்வு அனுபவத்தை தந்துள்ளார்கள் என்னும் அடிப்படையில் சமகால பாடல் வகைகளுக்கு அடிகோலியவை சங்கப் பாடல் வகைகள் என்பது தெள்ளத்தெளிவாகிறது. பல இயற்பாக்களுடன் நிறத்தை இசைக்கும் போது இசையும், பண்ணென்பதற்கு காரணம் தாளங்கள் எட்டாலும், கிரியைகள் எட்டாலும் ஒசைப்படுத்தலால் பண் எனவும் பெயர் பெற்றது.[4]

## பாக்கள் ஒன்பதன் விளக்கம்

1. சிந்து - துள்ளல் ஓசை உடைய வண்ணப்பாடல்
2. திரிபாதம் - மூவடி முக்கால் வெண்பா
3. சவலை - ஒரு வகை வெண்பா. இலக்கண அடிப்படையில் ஊட்டச்சத்து குறைந்த பா வகை

4. சமபாதம் - அடியும், சீரும் சமமாக வருகின்ற விருத்தப் பாடல்
5. செந்துறை - தாளமின்றி, தாளத்தில் அமையாத பாடல்
6. வெண்துறை - முழு இலக்கணத்தை தாளத்துடன், நாட்டியம் மற்றும் கூத்திற்காக இயற்றப்பட்ட பாடல்கள்
7. தேவபாணி - போற்றிப்பாடல்கள், தெய்வ வழிபாட்டு பாடல்கள், தாளக்கட் பாடல்கள்
8. பெரும் தேபாவணி - துவபாணியின் ஒரு வகை இசைப்பாக்கள்
9. வண்ணம் - 20 வகை வண்ணப்பாடல் (தொல்காப்பியரின் வாரப்பாடல் மற்றும் சிலப்பதிகார வரிப்பாடல், பரிபாடல் முதலியன தாளத்துடன் பாடப்படும் வெண்துறையுடன் அடங்கும்)

## முடிவுரை

சங்க கால இலக்கியங்களே நம் வாழ்வின் காலக் கண்ணாடிகள். தமிழனின் தனித்திறம், தனித்தன்மை, தனி ஆளுமை, தனி அறிவுடைமை அனைத்தும் சங்க கால தமிழனின் வாழ்வியலில் இருந்து சம கால மக்கள் வாழ்வியல் முறைகள் வரை ஒன்றி வேரூன்றி வருகிறது. சங்ககால நிலப்பாகுபாட்டை ஐவகை நிலம் மூலம் அத்தனைக் கூறுகளையும் அதற்குள்ளே உள்ளடக்கி விட்டான் தமிழன். தமிழனின் இலக்கணத்திற்கு இலக்கணமாக விளங்கும் சங்க இலக்கியங்கள் இசை முறைகளையும் விட்டுவைக்கவில்லை. அன்றைய பண்ணு பெயர்த்தல் இன்றைய மூர்ச்சனை, அன்றைய யாழ் இன்றைய வீணை, அன்றைய தண்ணுமை இன்றைய மிருதங்கம் எனக் கூறிக்கொண்டே போகலாம். இசை முறைகளை நேசித்த தமிழன் சுவாசித்த உயிர் மூச்சுக்காற்றே கவின் மிகு நுண் கலைகள் என்னும் பண்பாட்டுச் சுரங்கம் என்பதை சங்க கால இசைச் சான்றுகள் சமகால இசை வகைகளுக்கு சான்று பகர்கின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## துணைநூல்கள்


1. இசைமரபு - சங்கீத வித்வான்
இசைமணி திரு.கா. சங்கரனார்
நெல்லை சங்கீத சபா
திருநெல்வேலி
1968
2. தொல்காப்பியத்தில் இசை - முனைவர் ராச. கலைவாணி
ஏழிசைப் பதிப்பகம்
மயிலாடுதுறை

2014

3. தமிழிசைக் கலைக்களஞ்சியம் தொகுதி-1 - முனைவர் வீ.ப.கா. சுந்தரம்
பாரதிதாசன் பல்கலைக்கழக வெளியீடு
திருச்சி
1992

4. பண்ணும் இலயமும் - முனைவர் இ. அங்கயற்கண்ணி
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும்
கலையகம் வெளியீடு
தஞ்சாவூர்-600 018
2010

5. தமிழர் இசை - முனைவர் அ.நா.பெருமாள்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை
1984

## கலைச்சொற்கள்

1. பாடினி - இசைக்கலைஞர்கள்
2. இசைப்பு - மெட்டு
3. உருவகைகள் - இசைப்பாடல்கள்
4. சவலை- - ஊட்டச்சத்து குறைந்த
5. பண் - ராகம்
6. மூர்ச்சனை - குரல் திரிபு
7. திரிபு - பெயர்த்தல்

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியத்தில் இசை, கலைவாணர். ராச. முனைவர், ப. xii.
2. இசை மரபு, சங்கரனார், கா. இசைமணி, ப. 40.
3. தமிழிசைக்கலைக் களஞ்சியம் (தொ-7), முனைவர் வீ.ப.கா. சுந்தரம், ப. 153.
4. பண்ணும் இலயமும், முனைவர் இ. அங்கயற்கண்ணி, ப. 146.
5. தமிழர் இசை, முனைவர் அ.நா. பெருமாள், ப. 36.

## சுருக்கக்குறியீட்டு விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொல். | - | தொல்காப்பியம் |
| 2. | நூ. | - | நூற்பா |
| 3. | சொல். | - | சொல்லதிகாரம் |
| 4. | சிலப். | - | சிலப்பதிகாரம் |
| 5. | மேற். | - | மேற்படி |
| 6. | உரை. | - | உரையாசிரியர் |
| 7. | அடியார்க். | - | அடியார்க்கு நல்லார் |
| 8. | தொ. | - | தொகுதி |